**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2018**

---

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின்154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைநிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. முன்னேற்றப்பட்ட கடற்கரையோர மற்றும் நாடளாவிய நீர்த் தரத்தின் விளைவாக தூய்மை மற்றும் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனூடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள நகர மற்றும் புறநகர் குடியிருப்பாளர்களிற்கான நகர அபிவிருத்தி மற்றும் பொதுச்சுகாதாரத்தை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 12597.11 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110.24 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10783.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியனை நிதியளிப்புச்செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 1813.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச்செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை

பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்டை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது
செயற்திட்ட வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 1. | செயற்திட்டத்தினால் கட்டப்பட்ட ஆய்வுகூட கட்டிடமானது 2016 ஏப்ரல் 26 அன்று கொழும்பு மாநகரசபைக்கு கையளிக்கப்பட்ட போதும் இது தொடர்ச்சியாக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றில் அபிவிருத்தி செலவினத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | 5.61 | தவறான வெளிப்படுத்துகை | முடிக்கப்பட்ட வேலைகளின் கிரயத்தினை அபிவிருத்திச் செலவினத்திலிருந்து வேறுபடுத்தி காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செயற்திட்டத்தினால் கட்டப்பட்ட சொத்துக்களின் கணக்கீட்டுக்கொள்கை மற்றும் அமுலாக்கல் முகவருக்கு மாற்றப்பட்டமை உறுதிப்படுத்தப்படவேண்டும். முடிக்கப்பட்ட கட்டுமான வேலைகளின் கிரயமானது பொருத்தமான சொத்துக்கணக்கிற்குமாற்றப்படவேண்டும். |
| 2 | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு நாணய மிகையானது நடைமுறைஅல்லாசொத்துக்களிற்கு எதிராக பதிவளிக்கப்பட்டிருந்தது | | நடைமுறை அல்லாசொத்துக்களின் பெறுமதியானது குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கருத்துரைக்கப்படவில்லை | நடைமுறை அல்லா சொத்துக்களின் உண்மைப் பெறுமதியானது கணக்கில் கொண்டு வரப்படவேண்டும்.. |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச்சட்டத்தின் பிரிவு 6 (01) இன் படி | ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட கிரயமுடைய ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதிலிருந்து 60 நாட்களிற்குள் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்ய வேண்டும் மேலும் ஒப்பந்த உடன்படிக்கை பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும் கட்டுமான ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை | ஒப்பந்ததாரரிற்கு எதிராக சட்டம், வரி தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கும் | சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்பது. | ஒப்பந்ததாரர் சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

பெரும்பாக கொழும்பு பகுதியில் உள்ளக நீரின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மற்றும் கழிவுநீர் குழாய் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துல் நிறுவன மற்றும் செயற்பாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுல்படுத்துவதற்கு உதவுதல் என்ற 03 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. சாக்கடை இணைப்புக்களின் 10 கிலோமீற்றர்களின் புனரமைப்பு மற்றும் சாக்கடை இணைப்புக்களின் 125 கிலோமீற்றர் குழாய்களின் தரத்தினை மதிப்பீடு செய்தலின் பௌதீக செயன்முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. செயற்திட்டத்தின் வேலைகளின் எல்லையானது போட் நகர அபிவிருத்தி, அண்மைய கொழும்பு நகர அபிவிருத்தி, கொழும்பு மத்திய வணிகமாவட்டம் , நீர் முன் அபிவிருத்தி வேலைகள் மாற்ற வேண்டியிருந்தது. இதன்விளைவாக கழிவுநீரகற்றல் பம்பு நிலையங்களின் கீழான வேலைகளின் எல்லையானது மாற்றபட்டிருருந்தது மற்றும் மேலதிக வேலைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகையால் கிரயம் மீதான தாக்கம் மற்றும் குறிக்கப்பட்ட வேலைகளின் முடிவுறும் காலப்பகுதி என்பவற்றை கணக்காய்வினால் தீர்மானிக்கமுடியாதிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 01. | வானதமுல்ல கழிவுநீர் பாதையை புனரமைத்தல் வேலைக்காக 2013 திசெம்பர் 20 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தமானது 2017 ஏப்ரல் 5 இல் தனியார் குடியிருப்புக்களிற்கு ஏற்பட்ட பாதிப்பினை தொடர்ந்து முடிவுறுத்தப்பட்டது.<br>ஒப்பந்ததாரரினால் பொருத்தமான சூழலியல்ஆய்வு பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்படட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் பாதிப்பிற்குள்ளான ஆதனங்கள் அனுமதிஅளிக்கப்படாததாக இருந்நதுடன் காப்புறுதி இழப்பீட்டினையும் பெற முடியாதிருந்தது. இதன் விளைவாக செயற்திட்ட முகாமைத்துவ அலகானது ரூபா 1.92 மில்லியனை செலுத்த வேண்டி ஏற்பட்டது அத்துடன் மிகுதி வேலையை முடிப்பதற்கான ஒப்பந்ததாரரை 2018 திசெம்பர் 31 வரை தெரிவு செய்யவில்லை | அ)மீள் கொள்ளல் நட்டஈடு போன்றவற்றால் மேலதிக கிரயம் ஏற்படுல்<br><br>ஆ) திட்டமிட்ட நடவடிக்கைகளை முடிப்பதற்கு காலதாமதம் ஏற்படும்.<br>உ)வழங்க எதிர்பார்க்கும் பயன்கள் பாவனையாளர் களை சென்றடைய மாட்டாது | ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட தினத்திலிருந்து செயற்திட்ட முகாமைத்துவ அலகானது மிகுதி வேலையை முடிப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. எனினும் எவ்முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை வேறு ஒப்பந்ததாரருக்கு மிகுதி வேலையை ஒப்பந்தத்தை சீர்படுத்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகானது செயற்திட்டத்தின் வேலையில் கிரயம் காலதாமதங்களை தவிர்ப்பதற்கு ஒப்பந்ததாரர்களின் வேலைகள் தொடர்பாக சீரான கண்காணிப்பு மேற்பார்வை முறைமைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 02) | கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட கழிவுநீரகற்றல் பம்பு நிலையங்களின் புனரமைப்பு,கட்டுமானம் நிறுவுதல் மற்றும் புதுப்பித்தலுக்கான ஒப்பந்தத்திற்காக 2015-யூலை-30 இல் வழங்கப்பட்ட ரூபா 1177.86 மில்லியனை வேலையின் வேகமின்மை காரணமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரருக்கு 90வீதமான கொடுப்பனவை மேற்கொள்ள முன்னர் முற்பணத்தை அறவிடுவதில் இடர் அடையாளம் காணப்பட்டது. | இவ்வொப்பந்தத்தில் 90வீதமான கொடுப்பனவை மேற்கொள்ள முன்னர் முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | ஆரசங்க கொள்ளல் வழிகாட்டுதலின்படி முற்பணத்தொகையினை இடைக்காலக்கொடுப்பனவிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

**3.3 பயன்படுத்தப்படாத வளங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1. | செயற்திட்டத்தின் மாதம்பிட்டிய சுற்றாடல் ஆய்வுகூடத்தில் 2019 மார்ச் இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் மூலம் ஆய்வுகூட உபகரணம் 2 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தாமை கண்டுபிடிக்கப்பட்டது. | ஆய்வுகூட உபகரணம் தொடர்பாக மோசடி நோக்கத்திற்கான சாத்தியப்பாடு மற்றும் பலனற்ற கடன் பயன்பாடு. | இருப்பு வகைகள் சோதனைத் தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு மாநகர சபையின் வேண்டு கோளிற்கிணங்க விநியோகிக்கப்பட்டது. | மேலதிக உபகரணங்களிற்கான கட்டளை தொடர்பாகவும் வைத்திருத்தல் தொடர்பாகவும் காரணங்களை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சுற்றாடல் அதிகாரி 22 ஒக்டோபர் 2018 இல் செயற்திட்டத்திலிருந்து விலகியுள்ளார்.கடன் ஒப்பந்தத்தின்படி செயற்திட்டத்தின் சுற்றாடல் செயற்திறன் ஒழுங்காக கண்காணிப்புச் செய்யப்படவேண்டும் அதன்மேலான அறிக்கைகள் ஆண்டிற்கு இருமுறை கடன் முகவருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். | செயற்திட்டத்தின் வேலை தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு ஒழுங்குமுறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் மேற்பார்வை தொடர்பான தேவைப்பாடுகளை உறுதிசெய்ய தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் வேலைகளானது சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்ததால் இத்தேவைப்பாடானது கட்டாயமானது. ஆகையால் சுற்றாடல் அதிகாரியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| தொழில் நிலைகள் | பதவிகளின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்டது | 2018 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்கள் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவ அலகு 01.செயற்திட்ட துணை இயக்குநர் (பொறியியல்) | 01 | - | 01 | செயற்திட்டத்தின் சீரானவேலைத் தொழிற்பாடுகள்பாதிக்கப்படும். | சந்தையில் காணப்படும் மேம்மடுத்தப்பட்ட சம்பள அளவுகள் காரணமாக தகுதிவாய்ந்த தனிநபர்களை தக்கவைத்தல் கடினமாக உள்ளது. தகுதிவாய்ந்த நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் விண்ணப்பங்களை கோருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | பொருத்தமான நபர்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| 02.செயற்திட்ட பொறியியலாளர் (கொள்ளல்) | 01 | - | 01 | | | |
| 03.செயற்திட்ட பொறியியலாளர் | 10 | 08 | 02 | | | |
| 04.செயற்திட்ட உதவி பொறியியலாளர் – II | 05 | 03 | 02 | | | |
| 05.கட்டுமான முகாமையாளர் - I | 02 | 01 | 01 | | | |